[4th November 1966

திரு. செ. மாதவன் : சார், ஓய்வுபெற்ற பிறகு வயது வரம்பிற்கு மேலும் ஆண்டுதோறும் எக்ஸ்டென்ஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது. 58 வயது வரை ஆண்டுதோறும் இப்படிக் கொடுத்தால், அதுவும் ஜுடிஷியல் சர்வீசில் உள்ள ஒருவருக்குக் கொடுத்தால், அது நீதியில் குறுக்கிடுவது என்று ஆகாதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதையெல்லாம் ஹைக்கோர்ட்டு சிபாரிசின் பேரில் அரசாங்கம் முடிவு செய்கிறது.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இந்த மாவட்ட நீதிபதிகள் போலவே, துணை நீதிபதிகளுக்கும் வயதை உயர்த்த அரசாங்கம் உத்தேசிக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அப்படிப்பட்ட உத்தேசம் இல்லை.

Allowance to student-trainees

* 390 Q.—SRI C. SRINIVASAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the amount of allowance granted now to the student-trainees in Teachers' Basic Training Institutions; and

(*b*) whether the Government will consider increasing the present allowance to Backward and other community students to Rs. 25 per month?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Rs. 18 per mensem each.

(*b*) No.

விசைத்தறிகள்

*391 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது மாநிலத்தில் மத்திய சர்க்காரால் விசைத்தறிகளுக்கு லைசென்ஸ்கள் வழங்கப்பட்டிருக்கின்றனவா ?

(இ) ஆமெனில், எத்தனை விசைத்தறிகளுக்கு லைசென்சுகள் வழங்கப்பட்டிருக்கின்றன ?

(உ) அவைகளில் எத்தனை தறிகளுக்கு மின்சார இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) ஆம்.

(இ) 6,921 விசைத்தறிகள் இம்மாநிலத்தில் அமைப்பதற்கு நூற்பு நெசவு ஆணையாளர் அனுமதிச் சீட்டுக்கள் வழங்கியுள்ளார்.

(உ) தமிழ்நாடு மின்சார போர்டு 5,229 விசைத்தறிகளுக்கு மின்சார இணைப்பு அனுமதித்திருக்கிறது.

திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, இந்த மின்சார இணைப்பு வழங்குவதில், மாநில சர்க்காருடைய கொள்கைக்கு விரோதமாக இருந்தால், இணைப்பு மறுக்கப்படுவதாகக் கூறப்படுகிறது. அது உண்மையா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : மத்திய சர்க்கார் அனுமதி கொடுத்த விசைத்தறிகளுக்கு மின்சாரம் கொடுப்பது என்று விதி போட்டோம். ஆனால், அந்த விதி செல்லாது என்று ஹைகோர்ட்டு சொல்லிவிட்டார்கள். ஆகவே, அந்த விதியை ரத்து செய்து விட்டோம்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசினரால் 6,921 விசைத் தறிகள் இம் மாநிலத்தில் வைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது என்றும், அவற்றில் 5,229 விசைத்தறிகளுக்கு மின்சார இணைப்பு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது என்றும் கனம் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இது இந்த அளவோடு நிறுத்தப்படுகிற அளவிற்கா? அல்லது மேற்கொண்டும் வழங்கப்படுகிற அளவிற்கு எதிர்பார்க்கப்படுகிறதா ? 9-00 a.m.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 12,500 விசைத்தறிகள் தமிழ்நாட்டுக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றையும் கொடுப்பதாக உத்தேசம் இருக்கிறது.

திரு. வி. எஸ். எஸ். மணி : விசைத்தறிகளுக்குத் தாராளமாக லைசென்ஸ் வழங்கப்படுவதால் கைத்தறி நெசவாளிகள் பாதிக்கப்படுகிறார்கள் என்ற கருத்தை இந்த சர்க்கார் ஏற்றுக்கொள்ளுகிறதா ? அப்படி விநியோகம் செய்யும் நேரத்தில் கைத்தறி நெசவில் ஈடுபட்டிருக்கும் குடும்பத்தாருக்கு மின்விசைத்தறிகளுக்கான லைசென்ஸ் வழங்கப்படும் என்ற கருத்தை ஒப்புக்கொள்ளுகிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இரண்டாவது, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலங்களில், தமிழ்நாட்டு அரசாங்கம் விசைத்தறியைப் புகுத்த வேண்டாம் என்று கடுமையாக எதிர்த்தது. ஆனால், மற்ற மாநிலங்களில் விசைத் தறிகளை அவர்கள் அனுமதி பெற்றும் பெருமளவும் ஏராளமாக வைத்துக் கொண்டு போகிற காரணத்தால், பிற மாநிலங்களில் உற்பத்தியாகும் விசைத்தறித் துணிகள் நம்முடைய ராஜ்யத்தில் விற்பனைக்கு வர ஆரம்பித்தது. இதை உணர்ந்த கைத்தறி நெசவாளிகள் தங்களுடைய சம்மேளனங்கள் மூலமாக, விசைத் தறிகள் தமிழ்நாட்டுக்கும் கொடுக்கப்படவேண்டும் என்று அவர்களே கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதையொட்டித்தான் இப்பொழுது கொள்கை மாற்றம் ஏற்பட்டிருக்கிறது.

திரு. கரு. சீமைச்சாமி : தமிழ்நாட்டில் கிட்டத்தட்ட 30 லட்சம் பேர்கள் கைத்தறித் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். இப்பொழுது விசைத்தறிகளுக்கு அனுமதி கொடுத்ததன் காரணமாக,

[4th November 1966

ஏற்கனவே கைத்தறித் தொழிலில் ஈடுபட்டிருந்த நெசவாளிகளில் எத்தனை லட்சம் பேர்கள் வேலை இழப்பார்கள் என்று சொல்ல முடியுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : வேலை இழக்கமாட்டார்கள் என்று தான் நம்புகிறேன்.

திரு. து. ப. அழகமுத்து : நம்முடைய மாநிலத்தில் அனுமதி பெருத விசைத்தறிகள் அதிகமாக இருக்கின்றனவா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சற்றேறக்குறைய 4,000 இருக்கின்றன.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : தலைவர் அவர்களே, தஞ்சை ஜில்லாவில் 102 கூட்டுறவு சங்கங்களை இணைக்கும் நன்னிலம் கூட்டுறவு சங்க யூனியன் விசைத்தறிகள் வேண்டும் என்று கேட்டிருக்கிறது. அதன் கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இந்த 12,500 விசைத் தறிகளில் 50 சத விகிதத்தைக் கூட்டுறவு சங்கங்களுக்கு ஒதுக்குவதாக சர்க்கார் உத்தேசித்துக் கொண்டிருக்கிறது.

திரு. எஸ். ஜே. ராமசாமி : கைத்தறிகள் இருக்கக்கூடிய இடங்களில் விசைத் தறிகளைப் புகுத்த சர்க்கார் ஏற்பாடு செய்திருக்கிறது. இந்த நிலையில் கைத்தறியாளர்கள் இந்த விசைத்தறிகளைக் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக வைத்தால் அனுமதி கொடுக்க சர்க்கார் முன்வருமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதைத்தான் இப்பொழுது சொன்னேன். நம்முடைய ராஜ்யத்திற்கு ஒதுக்கப்பட்ட விசைத் தறிகளில் பாதி பங்கு கூட்டுறவு சங்கங்களுக்குக் கொடுப்பதாக உத்தேசம் இருக்கிறது.

திரு. கரு. சீமைச்சாமி : விசைத்தறியால் கைத்தறி பாதிக்கப் பட்டிருக்கிறது என்பதையாவது அமைச்சர் அவர்கள் ஒத்துக் கொள்கிருர்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நான் ஒத்துக்கொள்ளுகிறேனு, இல்லையா என்பது ஒருபுறமிருக்க; விசைத்தறியே வேண்டாமென்று இது வரையிலும் சொல்லிக்கொண்டிருந்த கைத்தறியாளர்களே தங்களுடைய கருத்தை மாற்றிக்கொண்டு விட்டார்கள்.

திரு. எஸ். முருகையன் : லைசென்ஸ் பெருத விசைத் தறிகளுக்கு மின்சார இணைப்பு எப்படிக் கொடுக்கப்பட்டது ? லைசென்ஸ் பெருத விசைத் தறிகள் 4,000 இருப்பதாக அமைச்சர் அவர்கள்

4th November 1966]

சொன்னார்கள். லைசென்ஸ் பெறாத தறிகளுக்கு மின்சார இணைப்புக் கொடுக்கக் கூடாது என்று மத்திய சர்க்கார் சட்டம் ஏற்கனவே இருந்தும் கூட, நாலாயிரம் தறிகளுக்கு எப்படி மின்சாரம் இணைப்புக் கொடுக்கப்பட்டது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் அங்கத்தினரை என்னுடைய சார்பில் வக்கீலாக வைத்துக்கொள்ளத் தவறிவிட்டது தான் காரணம் என்று நினைக்கிறேன். இதே கருத்தை ராஜ்ய சர்க்கார் வலியுறுத்தியது. அனுமதி பெறாத விசைத் தறிகளுக்கு மின்சாரம் கொடுக்கத் தேவையில்லை என்று நாங்கள் வாதாடினோம் ஆனால், கோர்ட்டிலே—உயர்நீதி மன்றத்திலே—"லைசென்ஸ் பெறுவதற்கும் மின்சாரம் வழங்குவதற்கும் சம்பந்தம் இல்லை, லைசென்ஸ் பெறாதவர்களுக்கு மின்சாரம் வழங்கக்கூடாது என்று சொல்வதற்குச் சர்க்காருக்கு அதிகாரம் இல்லை" என்று சொல்லி விட்டார்கள்.

திரு. எம். எஸ். செல்வராஜன் : கூட்டுறவு சங்கங்களுக்குப் பாதிப் பங்கு விசைத்தறிகள் கொடுத்தது போக, மீதமுள்ள பாதியை எந்த எந்த அளவிற்கு, யார் யாருக்கு விநியோகிப்பதாக அரசாங்கத்தின் கொள்கை இருக்கிறது ? முழு அளவிலே உபயோகப்படுத்திக்கொள்ள முடியும் என்ற நம்பிக்கை இந்த அரசாங்கத்திற்கு இருக்கிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : எப்போதும் எனக்கு நம்பிக்கை உண்டு. அதைப்பற்றிக் கனம் உறுப்பினருக்கு எந்தச் சந்தேகமும் தேவை இல்லை. விசைத்தறிகளில் பாதி கூட்டுறவு சங்கங்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. மறு பாதி இருப்பதை சாயப் பட்டரை வைத்திருப்பவர்கள், நூல் விநியோகம் செய்கிறவர்கள் போன்று கைத்தறியையொட்டிய இந்த விதமான தொழில்களில் ஈடுபட்டிருக்கிறவர்களுக்குக் கொடுக்கலாம் என்ற யோசனை இருக்கிறது.

திரு. கரு. சீமைச்சாமி : மதுரை மாவட்டத்தில் 103 கைத்தறி சொஸைட்டிகள் இருந்தன. விசைத்தறிகளுக்கு லைசென்ஸ் கொடுப்பதன் காரணமாக அவற்றில் 33 சொஸைட்டிகள் கலைக்கப்பட்டு 70 சொஸைட்டிகளே பாக்கி இருக்கின்றன என்பதாவது அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு வந்ததா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் உறுப்பினர் எழுதி அனுப்பினால் அதைக் கவனிக்கிறேன்.

Handloom Weavers' Co-operative Societies

* 392 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state whether the Government are aware of the change that the Reserve Bank of India has effected in its scheme for affording credit facilities for the working capital requirements of Co-operative Handloom Societies and the consequent adverse repurcussion on the said societies as a result thereof?